கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 59 இதழ் : 09 டிசம்பர் 2024 விலை ரூ.25/-



## நான் உள்ள வந்தா என்னப்பா?

– ம.ரா.

## கணையாழி மின்னிதழ் சந்தா விவரம்

தனி இதழ் ரூ 25

ஓராண்டு சந்தா ரூ 275

சந்தா செலுத்துபவர்களுக்கு மின்னிதழ் அனுப்பப்படும்.

இணையத்தில் வாசிக்க

**www.kanaiyazhi.com**

**magzter.com, Magraan - Magazines**

அன்புகூர்ந்து பாருங்கள்..

## மின்னிதழ் சந்தா செலுத்த வங்கி விவரம்

Account Name - KANAIYAZHI,
Account No. 147202000000792
Bank - INDIAN OVERSEAS BANK,
VALMIKI NAGAR BRANCH,
CHENNAI-600 041.
IFSC CODE- IOBA0001472

G Pay

Kanaiyazhi Tamil Magazine

# உள்ளடக்கம்


## கட்டுரை

| | |
|---|---|
| ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் | 13 |
| கவிதைக்காரன் இளங்கோ | 33 |
| ஈழபாரதி | 50 |
| கோ. மன்றவாணன் | 52 |
| அய்யனார் ஈடாடி | 62 |
| கார்த்திக் கிருபாகரன் | 65 |

## சிறுகதை

| | |
|---|---|
| கவிஜி | 06 |
| வாசுதேவன் அருணாசலம் | 23 |
| வரத.இராஜமாணிக்கம் | 41 |
| உஷாதீபன் | 55 |

## கவிதை

| | |
|---|---|
| தங்கேஸ் | 12 |
| அன்றிலன் | 22 |
| கி.சரஸ்வதி | 32 |
| அனிதா அருண்குமார் | 39 |
| செ.புனிதஜோதி | 49 |
| ஆர். வத்ஸலா | 61 |
| வெ. தமிழ்க்கனல் | 61 |
| ஈசு | 68 |
| மு.முபாரக் | 69 |
| காரைக்குடி சாதிக் | 69 |

## கடைசிப் பக்கம்

| | |
|---|---|
| இந்திரா பார்த்தசாரதி | 70 |



சிறுகதை

வாசுதேவன் அருணாசலம்

# ஏன் இப்படிப் பண்ணினே!

**60** ... 65...70 ...75 ...80... ராயல் என்ஃபீல்டு 350 சிசி தண்டர் பேர்ட் மெரைன் ப்ளூ இருசக்கர வாகனத்தில் விரைந்துகொண்டிருந்தான் சந்துரு. "வேண்டாம்! சொன்னாக்கேளு! விடு போகிறான்!" என்றாள் வாகனத்தின் பின்புறம் ஒரு கால் ஒரு பக்கம் என்று அமர்ந்திருந்த அவனது துணைவி இந்து. அவளுடைய வார்த்தைகள் அவன் காதில் விழுந்தது என்றாலும், அவை அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. வளைந்தும் நெளிந்தும் சுழித்தும் சென்று, தனக்குமுன் ஓர் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஓர் இளைஞனை நெருங்கினான். மிக அருகில் அவனுடைய வாகனத்திற்கு இணையாகச் சென்றுகொண்டே தன்னுடைய இடதுகையை நீட்டி அவனுடைய கவனத்தைத் தன்பக்கம் ஈர்த்து ஓரமாக வாகனத்தை நிறுத்தும்படி சைகை செய்தான். அந்த இளைஞனும் ஏன் என்று ஒன்றும் புரியாதவனாய் வாகனத்தின் வேகத்தைக் குறைத்துச் சாலையின் ஓரத்தில் நிறுத்தினான். சந்துரு தனது வாகனத்தை அவனுடைய வாகனத்திற்கு குறுக்கே நிறுத்தினான். சந்துருவும் இந்துவும் கீழே இறங்கினார்கள். "உனக்கென்ன அறிவில்லையா?" என்றான். சந்துருவின் குரல் சற்று ஓங்கிதான் இருந்தது. இந்த விசயத்தில் அவனைக் கட்டுப்படுத்த முடியாது என்பது இந்துவிற்கு நன்றாகவே தெரியும் என்பதால் அவள் எதுவும் பேசாமல் நடப்பதை மட்டும் வேடிக்கைப் பார்க்க அங்கே தற்செயலாக வந்தவள்போல் கவனிக்கத் தொடங்கினாள்."என்ன சொல்றீங்க? ஏன் இப்படிக் கேக்கறீங்க?" என்று சற்று அதிர்ந்துபோனவனாய்த்தான் அந்த இளைஞன் கேட்டான். "அந்தக் குட்டி நாய் குறுக்கே வர்றதைப் பாத்துக்கிட்டே ஸ்பீடைக் குறைக்காம போற! ஜஸ்ட்... டு மிஸ்! அடிபட்டு செத்திருக்கும்! அப்படி வேமா போயி என்னத்தடா புடுங்கப்போற?" என்று காட்டமாகவே கேட்டான். அந்த இளைஞன் சந்துருவை விட வயதில் குறைந்தவன் என்பதாலோ அல்லது தான் செய்தது தவறு என்ற குற்ற உணர்வு அவனுக்குள்ளே ஏற்கெனவே இருந்ததாலோ என்னவோ எதுவும் பேசாமல் நின்றான். இருந்தாலும் தன்பக்கம் தவறில்லை என்று நிரூபிக்கவேண்டும் என்று அவன் நினைத்தானோ என்னவோ, "பாத்துத்தானுங்க வந்தேன்"என்றான். "என்னத்தப் பாத்துக் கிழிச்ச!" என்றான் சந்துரு. "அதுதான் தப்பிச்சிருச்சுல!" என்றான் அந்த இளைஞன்.

அந்த வார்த்தைகள் வந்து விழும்முன் சந்துருவின் இடதுகை அந்த இளைஞனின் இடது கன்னத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. சரியான நேரத்தில் தடுத்து நிறுத்தினாள் இந்து. "விடு! போவோம்! வண்டியை எடு!" என்று சந்துருவை இழுத்தாள். அந்த இளைஞனை முறைத்துக்கொண்டே குறுக்கே நிறுத்திய தனது இருசக்கர வாகனத்தை எடுத்தான். அவனும் இந்துவும் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர். அந்த இளைஞனும் அவனுடைய வாகனத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் பின்னாலேயே மெதுவாக ஓட்டிக்கொண்டு வந்தான். தனது வாகனத்தின் வலதுபுறக் கண்ணாடியில் மெதுவாக தன் பின்னால் வந்துகொண்டிருந்த அந்த இளைஞனை அவ்வப்போது பார்த்துக்கொண்டே பயணித்தான் சந்துரு.

***

கால்நடை மருத்துவமனையிலிருந்து சந்துருவுக்கு கைபேசி அழைப்பு வந்தது. யாரென்று பார்த்தான். தூய்மைக்காவலர் சிவகாமி அழைத்துக்கொண்டிருந்தார். அன்று சந்துரு மருத்துவமனைக்குச் செல்லவில்லை. தற்செயல் விடுப்பிலிருந்தான். இந்துவிற்கு அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் எடுக்க அவளை அழைத்துச்செல்ல வேண்டும் என்பதுதான் விடுப்பிற்கான காரணம். சற்றுத் தயக்கத்துடனேயே கைபேசியின் பதில் பொத்தானை அழுத்தி, "சொல்லுங்க!" என்றான் சந்துரு. "அய்யா, நீங்க இன்னைக்கு லீவுனு சொன்னாங்க. இங்கே இருக்கீங்களா? அல்லது வெளியூருங்களா?" என்றாள் சிவகாமி. இந்தக் கேள்வியின் தன்மையிலேயே ஏதோ மிகவும் முக்கியமான ஒன்று என்பதை சந்துருவால் யூகிக்க முடிந்தது. "சும்மா, சொல்லுங்க!" என்றான் சந்துரு. "இல்லைங்க! அந்த வெள்ள நாய் காருல அடிபட்டு, இழுத்துக்கிட்டேபோயி... தோட்டத்துல படுத்திருக்குங்க! வாட்ச்மேன் உங்களுக்குப் போன் பண்ணி, சொல்லச் சொன்னாருங்க!" என்றாள் சிவகாமி. சந்துருவிற்கு படபடப்பு ஆரம்பித்தது. "சரி வர்றேன்" என்று சொல்லி, கைபேசியைத் துண்டித்துவிட்டு, ஸ்கேன் எடுக்கப் போவதற்காகத் தயாராகிக்கொண்டிருந்த இந்துவிடம் சிவகாமி சொன்னதைச் சொன்னான். "போய் என்னனு பாரு. ஸ்கேன் இன்னொரு நாள் பாத்துக்கலாம்" என்று சந்துருவை அனுப்பி வைத்தாள் இந்து. வீட்டிற்கும் மருத்துவமனைக்கும் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவுதான். சந்துரு கிளம்பினான்.

***

சந்துரு தனது முப்பத்தியோராவது வயதில் உடுமலை அரசு கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவராக வந்தான். சுமார் எட்டு வருடங்களாக இங்கேயே பணியாற்றி வருகிறான். தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகாவிலுள்ள கோம்பைதான் சொந்த ஊர். படித்ததெல்லாம் சென்னை. இருபத்து ஏழாம் வயதில் காதல் திருமணம். கோம்பை அருகே போடிநாயக்கனூர்தான் இந்துவின் சொந்தஊர். இரண்டு பெண் குழந்தைகள். ராஜி ஏழாம் வகுப்பு. சுஜி ஐந்தாம் வகுப்பு. இருவரும் உடுமலையில் ஒரே பள்ளியில் பயின்றுவருகிறார்கள். இந்துவிற்கு நாய்கள் என்றால் பைத்தியம். சந்துருவிற்கு நாய்கள் என்றால் வைத்தியம். எந்த நாயாக இருந்தாலும் சரி! தெருவில் அலையும் நாயாக இருந்தாலும் சரி! வளர்ப்பு நாயாக இருந்தாலும் சரி. மருத்துவ உதவி தேவைப்பட்டால் எதைப் பற்றியும் யோசிக்கவே மாட்டான். நேரம், பொருள் என எதையும் இழக்க யோசிக்க மாட்டான். சாக்கடையில் உழன்று தாங்க முடியாத நாற்றம் என்றாலும் சகித்துக்கொள்வதற்கான மனோபாவத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

‘பார்வோ’ என்ற நோய் தாக்கி அதனால் நாய்கள் வெளித்தள்ளும் கறுப்புநிற மலத்தின் நாற்றம் யாரையும் எளிதாக வாந்தியெடுக்க வைத்துவிடும். குறைந்தபட்சம் குமட்டலாவது வந்துவிடும். அந்த நாற்றத்தையும் தன் அனுபவத்தால், தன் இரக்கக் குணத்தால் வென்று, சில நேரங்களில் அதுபோன்ற நாய்களின் மலத்துவாரம், வால், கால்கள் அனைத்தையும் எந்தவித முகச்சுழிப்புமின்றி சுத்தம் செய்வான். இரண்டு மாதக் குட்டிகளுக்கு கூட மெல்லிய நரம்புகளை இலகுவாகத் தேடித் தேவையான திரவ மருந்துகளைச் செலுத்தி காப்பாற்றிவிடுவான். விலங்குகளின்பால் இருந்த அன்புதான் அவனை இந்துவோடு சேர்த்தது எனலாம். எந்த ஒரு விலங்கின் உயிரும் ஒரு மனித உயிருக்கு எந்தவிதத்திலும் குறைந்ததில்லை என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டவன். “விலங்குகளின் இடத்தில்தான் மனிதர்கள் வாழ்கின்றார்களே தவிர, மனிதர்களின் இடத்தில் விலங்குகள் வாழவில்லை” என்பதைக் கொள்கையாகவே கொண்டவன். தன்னால் முடிந்தவரை இதை அனைவரிடத்திலும் அழுத்தமாகவே சொல்லுவான்.

மூன்று வருடங்களுக்கு முன்பு மருத்துவனையின் நுழைவாயிலில் சற்று அகன்ற சாக்கடையின்மீது விசாலமாக அமைக்கப்பட்டிருந்த பாலத்தின் அடியில் கண்டெடுக்கப்பட்ட மூன்று வாரப் பெண் குட்டிதான் அந்த வெள்ளை நாய். பாலத்தின் அருகில் விடப்பட்டிருந்த அந்தக் குட்டி தவறி சாக்கடையில் விழுந்திருந்தது. இங்கு உடுமலையில் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஓர் அற்புதமான பழக்கம் உண்டு. பெண்நாய் வளர்ப்பவர்கள் அதனுடைய வேட்கைக் காலத்தை அறிந்து அதனைத் தனிமைப்படுத்தி, சரியாகக் கவனிக்க மாட்டார்கள். அது போடும் குட்டிகளில் ஆண் குட்டிகளை மட்டும் விற்று, பணமாக்கிவிட்டு, பெண்குட்டிகளைக் கண் முழித்தபின்போ அல்லது அதற்கு முன்போ (இருக்கும் இரக்கத்தைப் பொறுத்து) ஒரு சிமெண்ட் சாக்குப்பையில் போட்டு ஊருக்கு அப்பால் யாரும் ரோட்டில் இல்லாத சமயம் பார்த்து ஏதாவது ஒரு குழிக்குள் போட்டுவிட்டு நிம்மதியாகப் போய்விடுவார்கள். சந்துருவின் உட்சபட்ச கோபத்தைக் கிளறும் ஒரே செயல் இதுதான். தெருவில் நாய்கள் அலைவதை, சாலையில் அடிபட்டு இறக்கும் அவலங்களைத் தடுக்க வழிகளே இல்லையா என்ற ஆதங்கம் சிலநேரங்களில் அவனை மனித இனத்தையே வெறுக்கும் அளவிற்கு மாற்றும். அன்றும் யாரோ அந்த வெள்ளை நாயை அங்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். தனது இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு வருவதற்குப் பிரதான சாலையிலிருந்து திரும்பும்போது அதைப் பார்த்துவிட்டான். உள்ளே வந்து வாகனத்தை நிறுத்திவிட்டு, பகல்காவலர் சாமிக்கண்ணுவிடம் சாக்கடைக் கழிவுகளை அகற்றப் பயன்படுத்தப்படும், அடிபாகத்தில் அகன்ற தகடுடன் கூடிய நீண்ட குச்சியைக் கொண்டுவரச் சொல்லி, மெதுவாக அந்தக் குட்டி நாயை வெளியே தூக்கினான். அதனை எடுத்துச் சென்று கல்மேஜையின் அருகிலிருந்த குழாய் ஒன்றில் கழுவிக் குளிப்பாட்டினான். ஒரு சிறிய துண்டால் அதனுடைய உடம்பை ஒற்றியெடுத்து சற்றுநேரம் வெளியில் நிற்க வைத்து, சாமிக்கண்ணுவிடம் கடையில் பால்வாங்கிவரச் சொல்லி அதோடு கொஞ்சம் தண்ணீர் கலந்து ஒரு தட்டில் ஊற்றி அந்தக் குட்டி நாயின்முன் வைத்தான். மெதுவாகக் குடிக்க ஆரம்பித்தது. பல உன்னதமான உணர்வுகளையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் தனக்கு அந்தக் குட்டி நாய் அடுத்த பதினோரு வருடங்கள்

தன்னுடைய கடைசி காலம்வரை சொல்லித்தரக் காத்திருக்கிறது என்பதை அறியாமல் அதை சற்று நேரம் பாரத்துக்கொண்டு நின்றுவிட்டு தன்னுடைய அறைக்கு சந்துரு திரும்பினான். வீட்டிற்கு திரும்பியவுடன் இந்துவிடம் நடந்ததைக் கூறினான். தினமும் அதற்கென்று ஒரு சிறிய சம்புடத்தில் உணவு கொடுத்துவிடுவாள். மருத்துவமனையிலேயே வளர்ந்து வந்தது. சந்துரு மருத்துவமனைக்குள் நுழைவதற்கு சில வினாடிகளுக்கு முன்பே வாசலுக்குச் சென்று வரவேற்கக் காத்திருக்கும். சந்துருவின் வாகன ஓசையை நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருந்தது. இவர்களின் உறவு நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்துகொண்டிருந்தது. இந்துதான் அந்த நாயிற்கு பெயர் ஒன்றை வைத்தாள். வள்ளி!

வேட்கைக் காலத்தில் இரண்டு வாரங்களுக்குத் தன் வீட்டிற்கு வள்ளியைத் தூக்கிவந்து பாதுகாப்பாகச் சந்துரு வைத்திருப்பான். தனது வீட்டில் ஏற்கெனவே வள்ளியைப் போன்றே தெருவில் கண்டெடுக்கப்பட்ட மூன்று பெண் நாய்கள் உள்ளன. வயது வித்தியாசம் காரணமாகப் பொருந்திப் போகாது என்பதால் இரண்டு வாரம் மட்டும் தன்னுடைய தோட்டத்தில் விசாலமாக இதற்கென்று கட்டப்பட்ட அறையில் வைத்திருந்து பார்த்துவிட்டு பின் மருத்துவமனையில் மீண்டும் விட்டுவிடுவான். கிட்டத்தட்ட இவ்வாறு ஐந்து முறை வள்ளியை வீட்டிற்குத் தூக்கி வந்துள்ளான் சந்துரு.

***

அடிபட்ட வள்ளிக்கு என்ன ஆயிற்று? சந்துரு மருத்துவமனைக்கு விரைந்தான். சிவகாமி வெளியில் வந்தாள். "அங்கதான் சார் படுத்திருக்கு!" மருத்துவமனையின் மேற்குப் பக்கத்தில் சின்னச்சின்னப் பூச்செடிகள் மட்டுமே இருக்கும் தோட்டத்தை நோக்கி கையைக் காட்டினாள். "பாக்க பாவமா இருக்குங்க சார்! பிழைக்காதுங்க சார்! சதையெல்லாம் வெளியே வந்திருச்சுங்க, சார்." என்று தொடர்ந்தாள் சிவகாமி. "வெளியே ரோட்டுக்குப் போகாதே... எப்படிப் போச்சு?" என்று கேட்டுக்கொண்டே தோட்டத்தை நோக்கி நடந்தான் சந்துரு. சாமிக்கண்ணுவும் அங்கு வந்துவிட்டார். "வெளியே போகலைங்க! அந்த அம்மா கார்தான் அடிச்சிருச்சு!" என்று கொஞ்சம் சாடையாகச் சொன்னார் சிவகாமி. "எந்த அம்மா?" என்று சந்துரு அதட்டிக் கேட்டான். "அதுதான் சார்! அந்த அராத்து! யார் கிட்டயும் பேசாம பச்சக் காருல வருமே!" என்று இழுத்தாள். சந்துருவிற்குப் புரிந்துவிட்டது. தன்னோடு பணிபுரியும் கோயம்புத்தூரிலிருந்து வரும் மற்றொரு மருத்துவர் "சுகந்தி!" வயது முப்பத்து எட்டு. காரில்தான் வருவார். எப்போதாவது அவருடைய அப்பாவுடன் வருவார். அப்படி அவருடைய அப்பாவுடன் வந்தால் உடனே கிளம்பிப் போய்விடுவார். சந்துருவே நான்குகால் வெளிநோயாளிகள் அனைவரையும் பார்த்துக்கொள்வான். "கன்னாபின்னானு பேசுறத கொஞ்சம் நிறுத்துறீங்களா?" என்று சிவகாமியிடம் கடிந்துகொண்டான் சந்துரு. பொதுவாகத் தன்னுடன் வேலை செய்பவர்கள் யாராக இருந்தாலும் மரியாதையாகவே பழகுவான். அதிகாரத் தோரணையை என்றுமே யாரிடமும் காட்டியதில்லை. சிவகாமி சற்று அதிர்ந்துதான் போனார். "அந்த அம்மாவைச் சொன்னால், இவருக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது" என்று நினைத்தார். "தோட்டத்தில எங்கனு சொல்லுங்க!" என்று சந்துரு சிவகாமியை அதட்டினான். சிவகாமி எதுவும் பேசாமல் சற்று வேகமாக நடந்துவந்து வள்ளி இருக்கும் இடத்தைக் காட்டினாள். சந்துரு செடிகளை விலக்கிவிட்டு வள்ளியைப் பார்த்தான். இரத்தத்தில் நனைந்திருந்த வள்ளியின் வால் ஆடிக்கொண்டிருந்தது.

"சந்துரு வந்துவிட்டான். இனி கவலையில்லை" என்பதை வள்ளியின் கண்கள் சொல்லிக் கொண்டிருந்தன. சந்துரு வள்ளியின் அருகில் அமர்ந்தான். "சார், வேண்டாங்க சார். வேதனையில் யாரு என்னானு தெரியாதுங்க சார் இதுகளுக்கு! கடிச்சுகிடிச்சு போடுமுங்க சார்!" என்றார் சாமிக்கண்ணு. வள்ளியின் அடிவயிற்று சதைகள் அனைத்தும் பிய்ந்து தொங்கிக் கொண்டிருந்தன. இரத்த வாடை சற்று அதிகமாகவே இருந்தது. சிவகாமி மூக்கை தனது சேலையால் மூடிக்கொண்டார். "சாமிக்கண்ணு, என் ரூம்ல டேபிளுக்கு ரைட் சைடுல இருக்கிற பீரோல ஒரு பெரிய பிளாஸ்டிக் விரிப்பு ஒண்ணு மடிச்சு வச்சிருப்பேன். கொஞ்சம் சீக்கிரம் எடுத்துட்டுவாங்க" என்றார். "சரிங்க, சார்" என்று சாமிக்கண்ணு அங்கிருந்து கிளம்பினார். வள்ளியின் பின்னங்கால்களை மெதுவாக்கப் பிடித்துக் தூக்கினான். வள்ளியின் தலை சடாரென்று திரும்பி சந்துருவின் கையை நோக்கி மின்னலாய் வந்தது. வலியின் விளைவுதான். சட்டென்று சந்துரு கண்களை மூடிக்கொண்டான். "அவசரப்பட்டுவிட்டோமோ? சாமிக்கண்ணு சொன்னது சரிதான்" என்று நினைக்கும்முன், அவனுடைய பின்னங்கையில் ஏற்பட்ட ஈரத்தை உணர்ந்து கண்களை மெதுவாகத் திறந்தான். வள்ளி தன் நாவினால் சந்துருவின் கையை நக்கிக்கொண்டிருந்தாள். "வலிக்கிறதுதான். தொட்டது நீ ஆயிற்றே!" என்பதுபோல் வள்ளியின் கண்கள் பேசின. வள்ளியின் கால்களை சற்று தூக்கிப் பார்த்தான். அடிவயிறு சுமார் ஏழு இஞ்சு அளவிற்கு கிழிந்திருந்தது தெரிந்தது. சாமிக்கண்ணு விரிப்பை எடுத்துவந்தார். அதை விரித்து வள்ளியை மெதுவாக, அளவாகத் தூக்கி அந்த விரிப்பில் போட்டான் சந்துரு. சாமிக்கண்ணு விரிப்பின் ஒருபுறம் பிடிக்க, சந்துரு மற்றொருபுறம் பிடிக்க மெதுவாகத் தூக்கி கல்மேஜைக்குக் கொண்டுவந்து வைத்தனர். வள்ளியால் நகர முடியவில்லை. சாமிக்கண்ணுவை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, தனது அறைக்கு விரைந்தான் சந்துரு. சிறிது நேரத்தில் தையல் போடுவதற்கான நூல், ஊசி, போவிடின் அயோடின் என்ற திரவ மருந்து இருக்கும் கண்ணாடிப் புட்டி, பஞ்சுச் சுருள், கத்திரிக்கோல், பற்றுக்குறடு ஆகியவற்றுடன் சந்துரு அங்கு வந்தான் செவிலியர் அமுதாவுடன். சாமிக்கண்ணுவிடமும் சிவகாமியிடமும் வள்ளியைப் பிடிக்கச் சொல்லிவிட்டு சல்லி சல்லியாகத் தொங்கிக்கொண்டிருந்த சதைகளை மெதுவாக நுணுக்கமாக அறுத்துவிட்டு, அமுதாவின் உதவியோடு பதினான்கு தையல் போட்டான். வள்ளி வலியில் சில நேரங்களில் கத்தினாள்; சில நேரங்களில் முனகினாள். ஆனால், நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தாள். சாமிக்கண்ணுவிடம் சொல்லி ஒரு ஆட்டோவை வரவழைத்தான். ஒரு பெரிய அட்டைப் பெட்டியில் வள்ளியை வைத்து, அதனை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு தன்னுடைய வீட்டிற்குச் சந்துரு சென்றான். இந்துவை தொலைபேசியில் அழைத்து வீட்டிலிருக்கும் மூன்று நாய்களையும் கட்டிப் போட்டுவிடச் சொன்னான். வீட்டில் வள்ளியை விட்டுவிட்டு அதே ஆட்டோவில் திரும்ப மருத்துவமனைக்கு வந்து தனது இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் வீட்டுக்குத் திரும்பினான்.

வள்ளி பிழைத்துக்கொள்வாளா? வள்ளியின் அருகில் கண்ணீர்மல்க அமர்ந்திருந்தாள் இந்து. சந்துரு இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே வந்தான். "எப்படி ஆனதாம்? என்றாள். "காரில் அடிபட்டிருச்சு" என்றான். "அப்படி ரோட்டுப்பக்கம் போக மாட்டானு சொல்லியிருக்கியே?" என்றாள். சந்துரு பதில் எதுவும்

கூறவில்லை. “யார் பாத்தாங்களாம்?” என்றாள். “சிவகாமிதான் பாத்திருக்காங்க!” என்றான். “நல்லவேளை. யாரும் பார்க்காமல் போயிருந்தால்?” என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் வடித்தாள். “பயப்பட வேண்டாம். வெறும் சதைதான். குடல் வரைக்கும் போகவில்லை. பிழைத்துக் கொள்வாள். தையல் மட்டும் பிரிந்துவிடக் கூடாது. பால் மட்டும் ஏதாவது இருந்தா கொடு. குளித்துவிட்டு வருகிறேன்” என்று சந்துரு குளிக்கச் சென்றுவிட்டான். அவன் சென்றிருந்த நேரத்தில் அவனுடைய கைபேசிக்கு அழைப்பு வந்தது. சற்று நேரம் கழித்து அழையுங்கள் என்று சொல்லுவதற்காக, சந்துருவின் கைபேசியை இந்து எடுத்தாள் டாக்டர் சுகந்தி. பலமுறை சந்தித்திருக்கிறாள். “மேடம், சார் குளிச்சிக்கிட்டிருக்கிறாரு. வந்தவுடன் பேசச் சொல்றேன்” என்றாள் இந்து. “வேறொன்னுமில்லை... அவரிடம் மன்னிப்பு கேட்டதாகச் சொல்லுங்க. அப்பாதான் கொஞ்சம் லெஃப்ட் பாக்காம காரை ஒதுக்கி ஒட்டிவிட்டார். நாய் அடிபட்டிருச்சு. இப்பதான் அமுதா கூப்பிட்டுச் சொன்னாங்க... சார் வந்து பாத்து, வீட்டுக்கு கொண்டுபோய்ட்டாருனு. ரொம்ப சாரி சொன்னேனு சொல்லுங்க... சென்னைக்குப் போயிட்டு இருக்கேன். கூப்பிடுறேனு சொல்லுங்க” என்று கூறி அழைப்பைத் துண்டித்துவிட்டார். சந்துருவின் இந்தச் செயல் இந்துவிற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எதையும் இந்துவிடம் அவன் மறைத்ததேயில்லை. வள்ளியிடம் அவன் காட்டும் அன்பின்மீது அவளுக்கு சில நேரங்களில் கோபமே வரும். அப்படிப்பட்டது சந்துருவிற்கும் வள்ளிக்குமான உறவு. யார் இந்த சுகந்தி! வள்ளியை விடவா பெரிசு! அபத்தமான யோசனைதான் என்றாலும் சந்துரு மறைத்த விசயம் சற்று வித்தியாசமாகவே இந்துவிற்குத் தோன்றியது. சந்துரு குளியலறையிலிருந்து வெளியே வந்தான். “சுகந்தி மேடம் போன் பண்ணுனாங்க” என்றாள் இந்து. “என்ன சொன்னாங்க?” என்றான். சந்துருவிடம் பதற்றம் எதுவும் தெரியவில்லை. வள்ளியை அடித்தது அவங்க காருதானாம். அவுங்க அப்பா கொஞ்சம் பாக்காம கார விட்டுட்டாராம். மன்னிப்பு கேட்டாங்க” என்றாள். சந்துரு சற்று நேரம் அமைதியாக இருந்தான். இந்துவின் கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது. “ஏன் இப்படிப் பண்ணினே!” என்றாள். சந்துரு பதில் எதுவும் சொல்லவில்லை.

“உண்மையை ஏன் நீ மறைத்தாய் என்பது எனக்குப் புரியவேயில்லை” என்றாள். சந்துரு மௌனமாகவே இருந்தான். “சரி! இது சம்மந்தமாக நான் உன்னிடம் எதுவும் கேட்க மாட்டேன். இது உன் உரிமை. அதில் நான் தலையிட மாட்டேன்.” என்று சமையலறைக்குள் சென்றுவிட்டாள். சிறிது நேரத்தில் இந்துவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. அவள் வந்து எடுப்பாள் என்று சந்துரு எதிர்பார்த்து நின்றான். அவள் வரவில்லை. சில வினாடிகளுக்குப் பின் மீண்டும் அவளுடைய கைபேசிக்கு அழைப்பு வந்தது. இந்து வரவேயில்லை. அடுத்து, சந்துருவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. “சொல்லுங்க... ஆமா! அவள் சமையலறையில் இருக்கிறாள் “...ம்... ம்... ம்... சரி கிளம்பி வருகிறோம்”என்று அழைப்பைத் துண்டித்தான். இந்துவிடம் வந்தான். உங்க அண்ணன் சிவாதான் கூப்பிட்டாரு... அப்பாவுக்கு கொஞ்சம் முடியலையாம். ஹாஸ்பிட்டலைஸ் பண்ணியிருக்காங்கலாம். வரச் சொல்லுறார்” என்றான். “நான்தான் வியாழக்கிழமை வர்றேனு சொல்லியிருந்தேனே!” என்றாள். “இப்பவே கிளம்பி வரச்சொல்றார்” என்றான். “ராஜியும் சுஜியும் ஸ்கூல்லயிருந்து வரணும். வந்தவுடனே கிளம்பிடுவோம்” என்றாள் சற்றுக்

கோபமாகவே. சிறிது நேரத்தில் மீண்டும் சந்துருவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. இந்துவும் அருகில் வந்து நின்றாள். இப்போது இந்துவின் அண்ணாவின் மனைவி பேசினார். "அப்பா தவறிவிட்டார்" என்று தளர்ந்த குரலில் நடுக்கத்துடன் கூறி, "கிளம்பி வாங்க" என்று அழைப்பைத் துண்டித்தார். "இந்து.... அப்பா...." என்று தயங்கி நின்றான். அப்படியே தரையில் அமர்ந்து இந்து அழத்தொடங்கினாள். சந்துரு அவள் அருகில் நின்றவாறே அவளது தலையைத் தடவி விட்டுக்கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து, "ஸ்கூலுக்குப் போயி ராஜியையும் சுஜியையும் கூட்டிக்கிட்டு வந்திடுறேன். நீ எல்லாத்தையும் எடுத்துவச்சி தயாரா இரு!" என்று கூறி சந்துரு கிளம்பினான். வெளியே வரும்போதுதான் உணர்ந்தான். வள்ளியைப் பார்த்துக்கொள்ள யாராவது வேண்டுமேயென்று. வீட்டிற்குள் சென்று தன்னுடைய அறையிலிருந்து எலிசபத் காலர் ஒன்றை எடுத்துவந்தான். அதை வள்ளியின் கழுத்தில் கட்டிவிட்டான். எலிசபத் காலர் இல்லையென்றால் போடப்பட்ட பதினான்கு தையல்களையும் பிரித்தெடுத்துவிடுவாள் என்பதால் அதைச் செய்தான். சாமிக்கண்ணுவிடம் தொலைபேசியில் வள்ளியையும் மற்ற மூன்று நாய்களையும் பார்க்கச் சொல்லிவிட்டு, ஊருக்குச் செல்லும் வழியில் செலவுக்கு ஆயிரம் ரூபாயை அவரிடம் கொடுத்துவிட்டுக் கிளம்பினான்.

இந்துவிற்கு ஏன் இப்படி அடுத்தடுத்து சோதனைகள்? மூன்று நாட்களுக்குப் பின் வீடு திரும்பினார்கள். வள்ளி எலிசபத் காலரைக் கிழித்துத் தூக்கி எறிந்திருந்தாள். போடப்பட்ட தையல் அனைத்தும் பிரிந்து இரத்தம் வடியவடிய அதை நக்கிக்கொண்டிருந்தாள். சாமிக்கண்ணு அப்போது வந்தார். "சார், நேத்து நைட்டுவரை நல்லாத்தான் இருந்துச்சிங்க சார். இப்பத்தான் இப்படி செஞ்சிருக்கணும்" என்று வருத்தத்துடனே சொன்னார். சாமிக்கண்ணு நம்பிக்கைக்குரியவர் என்பதால் சந்துரு அதைப் பெரிதுபடுத்தவில்லை. "சரிங்க... போயி ஒரு பிளாஸ்டிக் குடம் ஒன்னு வாங்கிட்டுவாங்க" என்று தன்னுடைய பர்ஸிலிருந்து ஓர் ஐம்பது ரூபாயை எடுத்துக் கொடுத்தான். இந்து உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் மிகவும் தளர்ந்து போயிருந்தாள். தன் நிலை, வள்ளியின் நிலை ஆகியவற்றைப் பார்த்து, தன் குடும்பத்திற்கு ஏதோ கெட்ட காலம் ஆரம்பமாயிருக்கிறது என்று நினைக்க ஆரம்பித்தாள். சென்ற வருடம் தன்னுடைய தாயை நான்காம் நிலை மூளைப் புற்றுநோய்க்கு (Grade IV glioblastoma multiforme (GBM)) பலி கொடுத்தாள். அந்த நோயின் கொடூரத்தை உடனிருந்து பார்த்தவள். கொஞ்சம் கொஞ்சமாக உடல் உருக்குலையும் நிலைகளை, பாதிக்கப்பட்டவர்கள் உணர்கிறார்களோ இல்லையோ, உடன் இருப்பவர்களைத் தாளமுடியாத வேதனையில் தள்ளிவிடும். அவ்வளவு திடகாத்திரமாக இருந்து அனைத்து வேலைகளையும் சலிப்பில்லாமல், சோர்வில்லாமல் செய்துவந்த தன் தாய், நோயின் பிடியில் உருமாறிக் கிடந்ததை அவளால் சகித்துக்கொள்ளவே முடியவில்லை. எவ்வளவோ போராடியும் காப்பாற்ற முடியவில்லை. அதன் தாக்கம் இந்துவிடம் இருந்துகொண்டே வந்தது. இந்து தனது பெற்றோருக்கு ஒரே மகள். தாயை இழந்த இந்து ஒருவித மனநோயாளியாகவே மாறியிருந்தாள் என்பதுதான் உண்மை. 'புற்றுநோய்' என்ற வார்த்தையே அவளை நிலைகுலையச் செய்துவிடும் அளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. தற்போது தன் தந்தை. பற்றாக்குறைக்குத் திடீரென்று சந்துருவின் குணத்தில் மாற்றம், உண்மையில் ஊனம்.

சந்துரு மோசமானவனா என்ன? சாமிக்கண்ணு பிளாஸ்டிக் குடம் ஒன்று வாங்கி வந்தார். வீட்டிலேயே இந்துவையும் சாமிக்கண்ணுவையும் பிடிக்கச் சொல்லி, வள்ளிக்கு மீண்டும் தையல் போட்டுவிட்டான் சந்துரு. சாமிக்கண்ணு வாங்கிவந்த பிளாஸ்டிக் குடத்தின் அடிப்பாகத்தை மூன்று இஞ்ச் அளவிற்கு வெட்டிஎடுத்துவிட்டு குடத்தின் தலைப்பகுதியை வள்ளியின் கழுத்தில் மாட்டிவிட்டான். இப்பொழுது வள்ளியால் தையல் போடப்பட்ட இடத்தை தன் வாயால் தொட முடியவில்லை. அடுத்த இரண்டு மாதத்திற்கு இந்து, வள்ளியை ஒரு குழந்தையைப் பார்ப்பது போல் பார்த்துக்கொண்டாள். தினமும் இரண்டு முட்டை, அரை லிட்டர் பால், தயிர் சாதம் கண்ணீர் கலந்து தொடர்ந்து ஒரு வாரம் நோய் எதிர்ப்பு ஊசிகள். வள்ளி இரண்டு மாதத்தில் குணமடைந்தாள். இந்த இரண்டு மாதத்தில் இந்து சந்துருவின் உறவில் ஒரு விரிசல்... ஓர் உரசல்... இருந்துகொண்டேதான் இருந்தது. சந்துரு மறைத்த விசயம் மட்டும் இந்துவின் மனதில் அவ்வப்பொழுது வந்துபோய்க்கொண்டிருந்தது. வள்ளியின் வருகையால் இரண்டு மாதங்களுக்கும் வீட்டிலிருந்த மற்ற நாய்களைக் கட்டியே வைத்திருக்க வேண்டியிருந்தது. நாய்களைக் கட்டிவைத்து வளர்ப்பதில் இந்துவிற்கும் சரி, சந்துருவிற்கும் சரி உடன்பாடில்லாத ஒரு விசயம். வள்ளியை மீண்டும் மருத்துவமனையில் விட்டுவிட முடிவுசெய்தான். ஒருநாள் மாலைவேளை. இந்து வீட்டின் அருகிலுள்ள கடைக்குச் சென்றிருந்தாள். அவள் இருக்கும்போது வள்ளியை எடுத்துச் சென்றால் வருத்தப்படுவாள் என்று காத்திருந்தான். இந்து கடைக்குச் சென்றதும், வள்ளியைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் விட்டுவிட்டு வீட்டிற்குத் திரும்பினான் சந்துரு. வீட்டினுள்ளே தன் குழந்தைகளுடன் தொலைக்காட்சியில் கார்ட்டூன் பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரத்தில் இந்து வீட்டிற்குள் வந்தாள். "ஏன் வள்ளியை அவிழ்த்து விட்டிருக்கீங்க?" என்றபடி சமையலறைக்குச் சென்றாள். சந்துருவிற்கு தூக்கிவாரிப் போட்டது. இந்துவிற்கு என்ன ஆயிற்று என்று! இருந்தாலும் வெளியில் சென்று பார்த்தான். வீட்டின் முன்வாசலில் படுத்திருந்தாள் வள்ளி. சந்துருவைப் பார்த்ததும் வாலாட்டத் தொடங்கினாள். ஒரு நிமிடம் சந்துருவால் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. "இந்து" என்று அலறினான். இந்து வெளியில் ஓடி வந்தாள். ராஜியும், சுஜியும்தான். "என்ன, என்னாச்சு?" என்றாள். "இப்பதான் இதைக் கொண்டு போயி ஹாஸ்பிட்டலில் விட்டுவிட்டு வந்தேன்" என்றான். "என்ன சொல்றீங்க?" என்று ஆச்சரியப்பட்டாள் இந்து. "பொறு!" என்று வீட்டின் ஆறு அடி சுற்றுச் சுவரில் இருந்த கேட்டைத் திறந்து வள்ளியைத் தூக்கிக் கொண்டுபோயி வெளியில் விட்டு கேட்டின் கதவைச் சாத்தினான். அடுத்த வினாடி சுற்றுச்சுவரின் மேலே கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தாள் வள்ளி. இலகுவாக உள்ளே இறங்கி வாசலில் சென்று படுத்துக்கொண்டாள். மற்ற நாய்களும் அவளை ஒன்றும் செய்யவில்லை. அனைவரும் வள்ளியின் செய்கையால் ஆச்சரியத்தில் வாயடைத்து நின்றனர். "இதுதான் என் வீடு! இங்குதான் இருப்பேன்!" என்று மட்டும்தான் வள்ளி பேசவில்லை. ஆனால், அனைவரும் புரிந்துகொண்டனர்.

சந்துரு-இந்து பிரச்சினை முடிந்ததா? சந்துருவிற்குப் பணியிட மாறுதல் ஆணை வந்தது. கரூர் மாவட்டத்திலுள்ள குளித்தலை அரசு கால்நடை மருத்துவமனை. அங்கேயே ஒரு வீடு ஒன்றைப் பார்த்து தங்கினான். அடுத்த வருடத்தின் கல்வியாண்டு தொடக்கத்தில்

குடும்பத்தோடு மாறிக்கொள்ளலாம்; குழந்தைகளின் பள்ளியைப் பாதியில் மாற்ற வேண்டாம் என்று முடிவு செய்திருந்தான். வாரத்தில் ஒருநாள் அல்லது மாதத்திற்கு இரண்டு நாட்கள் விடுப்பில் உடுமலை வந்துசெல்வான். தனது இருசக்கர வாகனத்திலேயே போய்வருவான். முதன்முதலில் குளித்தலையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தான். உடுமலை அரசு கால்நடை மருத்துவமனையை ஓரக்கண்ணில் பார்த்தபடி கடந்துகொண்டிருந்தான். தன் வாகனத்தின் வலது கண்ணாடியில் மிகவும் பரிச்சயப்பட்ட மனதிற்கு நெருங்கிய உருவம் ஒன்று பின்தொடர்ந்து கொண்டிருந்தது. வள்ளி! எங்கிருந்து வந்தாள் என்று தெரியவில்லை. அவனுடைய வண்டியின்பின் துள்ளிக்குதித்து ஓடி வந்துகொண்டிருந்தாள். வண்டியை ஓரமாக நிறுத்தினான். வள்ளி தன் இரு முன்னங்கால்களையும் அவன் வயிற்றின்மீது வைத்துத் தன் அன்பைப் பொழிந்துகொண்டிருந்தாள். அருகிலிருந்த ஒரு கடையில் பிரிட்டானியா பிஸ்கட் பாக்கெட் ஒன்றை வாங்கித் தன்னுடைய தோளில் தொங்கிக்கொண்டிருந்த பையில் திணித்துக்கொண்டான். வள்ளியைத் தூக்கித் தனது இருசக்கர வாகனத்தின் பெட்ரோல் டேங்கின்மீது அமரவைத்தான். தானும் ஏறிக்கொண்டு வாகனத்தை நகர்த்தினான். வள்ளி சற்றுப்பின்புறம் நகர்ந்து சந்துருவின் உடம்போடு ஒட்டிக்கொள்வதுபோல் அமர்ந்துகொண்டு காற்றைக் குடித்துக்கொண்டே வேடிக்கைப் பார்த்தவாறு பயணித்தாள். வீடு வந்ததும் ராஜியும் சுஜியும் சந்துருவினுடைய வாகனத்தின் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்தனர். வள்ளியைப் பார்த்தவுடன் “அம்மா! இங்க வந்து பாரேன்!” என்று இருவரும் ஒருசேரக் கத்திக்கொண்டு கேட்டின் கதவைத் திறந்தனர். இந்து வெளியில் ஓடிவந்தாள். வள்ளி வண்டியிலிருந்து குதித்து ராஜியையும் சுஜியையும் தாவிக் கொஞ்சிவிட்டு இந்துவிடம் ஓடி அவள்மீது தன் இரு முன்னங்கால்களையும் வைத்து ஒருவித அன்பின் ஒலியை எழுப்பினாள். ‘சந்துருவை நான் கூட்டிவந்துவிட்டேன் பாருங்கள்!’ என்று சொல்லுவது போல் இருந்தது. “எங்கிருந்தாள்? நீங்கள் போன அன்று இரவு போனவள். வந்துவிடுவாள் என்றும் பார்த்தோம் வரவேயில்லை. மறுநாள், அமுதா சொன்னாங்க ஹாஸ்ப்பிட்டல்ல இருக்குனு! உங்களைத் தேடித்தான் அங்கு போயிருக்கானு, அங்கேயே இருக்கட்டும்னு விட்டுட்டோம்”என்றாள். “ஹாஸ்பிட்டல் வழியா வரும்போது தொத்திக்கொண்டாள்” என்றான் சந்துரு. தோளில் கிடந்த பையிலிருந்து பிஸ்கட் பாக்கெட்டை எடுத்து அனைத்து நாய்களுக்கும் போட்டுவிட்டு வீட்டிற்குள் சென்றான். இதுதான் வாடிக்கை. சந்துரு குளித்தலைக்குக் கிளம்பும் அன்று இரவு மருத்துவமனைக்கு சென்றுவிடுவாள். சந்துரு வரும்போது உடன் தொற்றிக்கொள்வாள்.

முடிவுதான் என்ன? இந்து சந்துருவிடம் பேசுவதையும் தன் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதையும் வெளிப்படையாகத் தெரியுமளவிற்குக் குறைத்துக்கொண்டாள். சந்துரு மறைத்த விசயம் அவளை ஒருவித மனஅழுத்ததில் தொடர்ந்து இருக்கவைத்தது. அவ்வப்பொழுது அது கோபமாகவும் வெளியேறி, பின் மறையும். சந்துருவும் ஏன் அவ்வாறு செய்தான், அவனுக்கும் உடன் பணியாற்றும் அந்த டாக்டருக்குமான உறவைப் பற்றி இந்துவிடம் பல மாதங்களாகியும் எதுவும் கூறாதது இன்னும் அவளை வாட்டியது. ஒருநாள் குளித்தலையிலிருந்து மிகவும் தாமதமாக சந்துரு வந்தான். வள்ளியும் உடன் வந்து இறங்கினாள். ராஜியும் சுஜியும்

தூங்கிக்கொண்டிருந்தார்கள். இந்துவும் சந்துருவும் சாப்பாட்டை முடித்துத் தூங்கச் சென்றனர். இரவு 11:45 மணிக்கு சந்துருவின் அலைபேசி அலறியது. அனைவரும் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தனர். சந்துரு எடுத்துப் பார்த்தான். அமுதா. கதவைத் திறந்து வெளியில் வந்து பேசிவிட்டு வந்து படுத்துக்கொண்டான். என்னவென்று இந்துவிடம் எதுவும் சொல்லவில்லை. ஆனால் இந்துவால், அது அந்த டாக்டர் அம்மா சம்பந்தப்பட்டது என்பதை மட்டும் யூகிக்க முடிந்தது. சந்துரு அசதியில் நன்றாகத் தூங்கிவிட்டான். இந்துவிற்குத் தூக்கம் வரவில்லை. எழுந்து பிரதான அறைக்கு வந்தாள். கதவைச் சுரண்டும் சத்தம் கேட்டது. வள்ளிதான் என்பது இந்துவிற்கு உறுதியாகத் தெரியும். என்னவென்று பார்ப்பதற்காகக் கதவைத் திறந்தாள். வள்ளி நின்றுகொண்டிருந்தாள். முனகல் சத்தம் சற்று அதிகமாக இருந்தது. ‘ஏன் பிஸ்கட்போடாம போய்ட்டான்?’ என்ற கேள்வியைத் தாங்கியபடியிருந்த வள்ளியின் கண்களைப் பார்த்து புரிந்துகொண்டாள் இந்து. சந்துருவின் பேக்கைத் திறந்து பிஸ்கட் பாக்கெட்டை எடுக்க முயன்றபோது, அதனுடன் ஒரு கொத்துத் தாள்களும் சேர்ந்து வெளியில் வந்து விழுந்தன. கீழே விழுந்த ஒரு தாளின் ஓரத்தில் டாக்டர் சுகந்தியின் புகைப்படமிருந்தது. அது ஒரு மருத்துவ அறிக்கை என்பதைப் புரிந்துகொண்டாள் இந்து. புரட்ட ஆரம்பித்தாள். கடைசியாக இருந்த வார்த்தைகள் ஒரு நிமிடம் அவளுடைய மூச்சை நிறுத்திவிடுவது போலிருந்தது. “Grade IV – Glioblastoma Multiforme.” தன் அம்மாவிற்கு வந்த அதே மூளைப் புற்றுநோய். அதிர்ந்து அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அவளுடைய மனதிலிருந்த பல சிக்கல்கள், முடிச்சுகள் சட்டென்று மாயமானது போலவும் உணர்ந்தாள். மீண்டும் ஒருமுறை அதைப் படித்துப் பார்த்தாள். இந்துவிற்கு பழக்கமான வார்த்தைகள் அவை. வள்ளி அங்கே பிஸ்கட்டிற்காக நின்று கொண்டேயிருந்தாள். முனகல்கள் நிற்கவில்லை. கையிலிருந்த பிஸ்கட் பாக்கெட்டை பிரித்து அதில் சிலவற்றை எடுத்துக்கொண்டு வள்ளியை வெளியே அழைத்துச் சென்றாள். சிறிது நேரம் கழித்து வீட்டிற்குள் நுழைந்தாள். கதவைத் தாழிட்டுவிட்டுப் படுக்கையறைக்குச் சென்றாள். அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த சந்துருவை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். கண்களில் கண்ணீர் துளிர்த்துக் கொண்டிருந்தது. இருவருக்குமாக!

vasuaruntamil@gmail.com ■